**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.6/19</u>**

2024-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.சுகுமார், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.சுகுமார், |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த/பெ.சம்பத் |
| கிராமம் | - எறையூர் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>29.01.2024</u>

**<u>பி.வா.சா.2.</u>**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் 30 ஆண்டுகாளமாக மேஸ்திரி பணிசெய்கிறேன். எனக்கு தொழில் ரீதியாக சங்கம் உள்ளது. நான் அதில் உறுப்பினராக உள்ளேன். ஆனால் என்னிடம் அதற்கான அடையாள அட்டை இல்லை. பொதுவாக வீடு கட்டவேண்டுமெனில் காலிமனையாக ஒப்படைப்பார்கள். தாவா சொத்து நகராட்சிக்கு உட்பட்ட இடமா அல்லது ஊராட்சிக்கு உட்பட்ட இடமா என்றால் ஊராட்சிக்கு உட்பட்ட இடம். வீடு கட்டுவதற்கு ஊராட்சியில் அனுமதி பெற்றுதான் கட்டிடம் கட்டவேண்டும். வாதி பெருமாள் அனுமதி பெற்றுள்ளார். வரைபடம் அனுமதி வாங்கிதான் கட்டிடம் கட்டப்பட்டது வரைபடத்தை என்னிடம் கொடுத்தார். வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளை அளந்து பார்த்தேன் அதன்படிதான் இருந்தது. முன்பகுதி வடக்கு பக்கம் 39அடி. பின்புறம் 33 1/2அடி. பிரதிவாதி கட்டடித்தின் அளவு எனக்கு தெரியுமா என்றால் நான் பக்கத்து கட்டிடத்தின் அளவுகளை அளக்கவில்லை எனக்கு தெரியாது.

2) வாதி பெருமாளின் வீட்டு கட்டிடத்தின் கட்டுமானத்தை 2016ம் வருடம் ஆரம்பித்ததாக எனக்கு நினைவு. பெருமாள் வீட்டை நான் கட்ட ஆரம்பித்தபோது வாதியின் வீட்டின் கிழக்குபுறம் இருந்த பழனியின் வீட்டில் சுற்றுசுவர் இல்லை. பெருமாளுக்கும் எனக்கும் கட்டிடம் நான் கட்டியபோது தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் இல்லை. எனக்கு பிடிக்காததால் நான் விலகிக்கொண்டேன். நான் தரைதளம் மட்டும்தான் கட்டினேனா என்றால் தரைதளம் கட்டதான் ஒப்பந்தம் போடப்பட்டது. நான் தரைதளத்தை முழுவதுமாக கட்டிக்கொடுத்துவிட்டேன். 2016ம் வருடமே தரைதளத்தை கட்டிக்கொடுத்து ஒப்படைத்துவிட்டேன். அதன்மேற்கொண்டு வாதி பிரதிவாதிகளுக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும் தெரிந்ததால்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

3) பிரதிவாதிக்கு தாவா சொத்தின் கிழக்கு புறத்தில் உள்ள சுற்றுசுவரை நான்தான் கட்டிக்கொடுத்தேன். சுற்றுசுவரில் 18அடி கடந்தபிறகு ஒரு வளைவு ஏற்படுமா என்றால் சுற்றுசுவரில் வளைவு எதுவும் இல்லை. நேராகதான் கட்டினேன். நான் வாதியுடன் சண்டைபோட்டுக்கொண்டு அவரது சுற்றுசுவரை இடித்து கல்லையும் மணலையும் திருடி பிரதிவாதிக்கு சுற்றுசுவர் அமைத்துக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் சொத்தை நானும் சேர்ந்து பிரதிவாதியோடு ஆக்கிரமித்துள்ளேன் என்றும் அதனால்தான் வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவேண்டும் என்ற காரணத்தால்தான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அளவுகளை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி முதல்தளம் கட்டியுள்ளார் என்றும் அதற்கான படியைகூட சரியாக வைக்கமுடியாத அளவில் சுற்றுசுவர் அமைத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மீட்டர் அளவு குறித்தும், அடி அளவு குறித்தும் தெரியும். வாதி சுற்றுசுவரை நான் அளந்தபோது மீட்டரிலும் அடிகணக்கிலும் அளந்து பார்த்தேன் சரியாக இருந்தது.

4) நான் பெருமாள் வீட்டின் மதில்சுவர் இருந்தது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அந்த மதில்சுவர் பின்புறத்தில் உள்ள வீட்டின் உரிமையாளருக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. பிரதிவாதிதான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.